வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 10.3.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

புதுச்சேரியில் வேலையில்லா திண்டாட்டத்தின் சதவிகிதம் குறைந்துள்ளது என்று துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.

13 ஆயிரத்து 600 கோடி ரூபாய்க்கான புதுச்சேரி பட்ஜெட்டை முதலமைச்சர் திரு ரங்கசாமி, வரும் 12-ஆம் தேதி தாக்கல் செய்ய உள்ளார்.

மத்திய அரசு யார் மீதும், எந்த மொழியையும் திணிக்க வில்லை என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்று மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, கோரி உள்ளார்.

சட்டப்பேரவை-பட்ஜெட்

புதுச்சேரி 15-ஆவது சட்டப் பேரவையின் 6-ஆவது கூட்டத் தொடர் இன்று காலை துவங்கியது. ஆண்டின் முதலாவது கூட்டத் தொடர் என்பதால் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் உரையுடன் கூட்டம் துவங்கியது. சட்டப் பேரவையில் தமிழில் உரையாற்றிய திரு கைலாஷ்நாதன், புதுச்சேரியில் வேலையில்லா திண்டாட்டம் 6.7 சதவிகிதத்தில் இருந்து 4.3 சதவிகிதமாக குறைந்துள்ளது என்றார். புதுச்சேரியில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் 21 ஆயிரத்து 772 பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப் பட்டுள்ளதாகவும், குழந்தைகள், இளைஞர்கள், முதியோர் என அனைவருக்குமான திட்டங்கள் புதுவை அரசால் நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். துணை நிலை ஆளுநர் மேலும் உரையாற்றுகையில்

(வாய்ஸ்)

முன்னதாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஸ்நாதன் தமது உரையின் போது அண்மையில் மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங், புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் டி ராமசந்திரன் உள்ளிட்டோர் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தார்.

*பட்ஜெட்*

புதுச்சேரி சட்டப்பேரவையின் நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரில் 13 ஆயிரத்து 600 கோடி ரூபாய்க்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி 15-ஆவது சட்டப்பேரவையின் 6-ஆவது கூட்டம் இன்று காலை துணை நிலை ஆளுநர் உரையுடன் தொடங்கியது. ஆளுநர் உரைக்கு பின்னர் பேரவையின் அலுவல் ஆய்வுக் கூட்டம் பேரவைத் தலைவர் திரு செல்வம் தலைமையில் நடைபெற்றது. நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடர் இம்மாதம் 27-ஆம் தேதி வரை நடைபெறும் என்றும், நிதி துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு ரங்கசாமி, வரும் 12-ஆம் தேதி, 13 ஆயிரத்து 600 கோடி ரூபாய்க்கான பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளார் என்று, அலுவல் ஆய்வுக் கூட்டத்திற்கு பிறகு திரு செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ...........

(வாய்ஸ்)

*தேசிய பாதுகாப்பு வாரம்*

54-ஆவது தேசிய பாதுகாப்பு வாரம் நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டது. ஆண்டு தோறும் மார்ச் 4-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை தேசிய பாதுகாப்பு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. நாட்டின் பல்வேறு துறைகளில் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை உணர்த்தும் வகையில் இந்த வாரம் கடைபிடிக்கப்படுகிறது. வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய முக்கிய காரணங்களான பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை முன்னிலைப்படுத்தி இந்த ஆண்டுக்கான தேசிய பாதுகாப்பு வாரம் கடைபிடிக்கப்படுகிறது.

*பிரதமர்-மொரீசியஸ்*

பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் அரசு முறைப் பயணமாக நாளை மொரீசியஸ் செல்கிறார். நாளை மறுநாள் 12-ஆம் தேதி மொரீசியஸ் தலைநகர் போர்ட் லூய்ஸ்சில் நடைபெறும் அந்நாட்டின் தேசிய தினக் கொண்டாட்டங்களில் தலைமை விருந்தினராக பங்கேற்கிறார். இந்தியாவின் ராணுவ அணிவகுப்பு குழு ஒன்றும், கடற்படையின் கப்பல் ஒன்றும், ஆகாஷ்கங்கா வான்வெளி சாகச குழு ஒன்றும் மொரீசியஸ் நாட்டின் தேசிய தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்கின்றன. சென்ற 2015-ஆம் ஆண்டும் அந்நாட்டு தேசிய தினக் கொண்டாட்டங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமை விருந்தினராக பங்கேற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

*நாடாளுமன்றம்*

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் 2-ஆம் பகுதி இன்று காலை தொடங்கியது. இன்று தொடங்கி வரும் ஏப்ரல் மாதம் 4-ஆம் தேதி வரை 20 அமர்வுகளாக இந்த கூட்டத் தொடர் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத் தொடரின் போது வங்கிகள் சட்ட மசோதா, ரயில்வே மசோதா, கப்பல் போக்குவரத்து மசோதா உள்ளிட்ட மசோதாக்கள் மீதான விவாதங்களும், நிதி ஒதுக்கீடு கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்புகளும் நடைபெற உள்ளன.

*மாநிலங்களவை-குடிநீர்*

நாட்டின் 80 சதவிகிதத்திற்கும் அதிகமான கிராமப்புற வீடுகளுக்கு ஜல் ஜீவன் இயக்க திட்டத்தின் கீழ் குழாய் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுவதாக மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார். இன்று மாநிலங்களவையில் துணை கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்துப் பேசுகையில் இவ்வாறு தெரிவித்த அமைச்சர், 2019-ஆம் ஆண்டு 19 சதவிகித கிராமப்புற வீடுகளுக்கு மட்டுமே குழாய் மூலம் நீர் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். உலக சுகாதார அமைப்பின்

கணக்கீட்டின்படி, ஜல் ஜீவன் இயக்கத்தினால், நீரினால் பரவும் நோய்களால் தாக்கப்படாமல், சுமார் 4 லட்சம் உயிரிழப்புகள் தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

*பிரதான்-தமிழ்நாடு*

மத்திய அரசு யார் மீதும், எந்த மொழியையும் திணிக்க வில்லை என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். இன்று நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய திரு பிரதான், மத்திய அரசின் கொள்கையை ஏற்றால் தமிழ்நாட்டிற்கான பி எம் ஸ்ரீ நிதியை வழங்க தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றும் தெரிவித்தார். எதிர் கட்சிகள் ஆளும் பஞ்சாப் மற்றும் கர்நாடக மாநிலங்களிலும் பிஎம்ஸ்ரீ மற்றும் தேசிய கல்விக் கொள்கை அமல்படுத்தப்படுவதாகவும், தமிழ்நாடு அரசு தான் இவ்விஷயத்தில் அரசியல் செய்வதாகவும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

*ராகுல்*

மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, வாக்காளர் பட்டியல் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்று கோரி உள்ளார். இன்று பூஜ்ய நேரத்தின் போது மக்களவையில் இதுகுறித்துப் பேசிய திரு ராகுல் காந்தி அனைத்து எதிர்கட்சி உறுப்பினர்களும் வாக்காளர் பட்டியல் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார். பூஜ்யநேரத்தின் போது திரிணமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு சௌகத்தா ராய் இரட்டை வாக்காளர் அடையாள எண்கள் குறித்து கேள்வி எழுப்பினார்.

*நிதின் கட்கரி*

சாலை கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் பொருட்களுக்கான உற்பத்திச் செலவை குறைக்க முடியும் என்று மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். இதன் மூலம் தொழிற்சாலைகளும், நுகர்வோரும் பயன் அடைவார்கள் என்றும் அவர் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் நடைபெற்ற சோப்பு, சலவைப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் குறித்த 7-ஆவது சர்வதேச மாநாட்டில் பேசும் போது இவ்வாறு தெரிவித்த

திரு நிதின் கட்கரி, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும் இதனால் பயன் அடையும் என்று கூறினார். தொழிற்சாலைகள் உற்பத்தி செலவை குறைத்து, தரமான பொருட்களை வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். தூய்மையான எதிர்காலம் என்ற மையக் கருத்தின் அடிப்படையில் நடைபெறும் இந்த 3 நாள் மாநாடு அரசு பிரதிநிதிகள், தொழிற்சாலை தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகள் இடையே உறவுகளை ஏற்படுத்த வாய்ப்புகளை வழங்கும்.

*பல்கலைக் கழகம்*

பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் பிஏ.பிஎட், மற்றும் பிஎஸ்சி பிஎட், ஒருங்கிணைந்த 4 வருட இளங்கலை ஆசிரியர் கல்வி பாடத் திட்டங்களில் பயில விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 16-ஆம் தேதி வரை ஆன்-லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று பல்கலைக் கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுகள் தேசிய தேர்வு முகமை மூலம் நடத்தப்படும். இந்த படிப்புகளில் சேரத் தேவையான குறைந்த பட்ச கல்வித் தகுதி உள்ளிட்ட விவரங்கள் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக் கழகத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பஞ்சாப்-கைது*

சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்த முக்கிய நபர்களில் ஒருவரான ஷேனாஸ் சிங் என்பவரை பஞ்சாப் மாநில போலீசார் நேற்று இரவு தார்ன் தரன் மாவட்டத்தில் கைது செய்துள்ளனர். கொலம்பியா நாட்டில் இருந்து அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளுக்கு இடையே கொக்கைன் எனும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வரும் இவரை அமெரிக்க நாட்டின் புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்பான FBI தேடி வந்த நிலையில் இவர் பஞ்சாப் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சென்ற மாதம் 26-ஆம் தேதி ஷேனாஸ் சிங்கின் கூட்டாளிகள் 4 பேர்அமெரிக்காவில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அளித்த தகவலின் பேரில், இம்மாதம் 2-ஆம் தேதி இந்தியா வந்த ஷேனாஸ் சிங் தார்ன் தரன் மாவட்ட

காவல்துறையினரால், கண்காணிக்கப்பட்டு நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, அமெரிக்காவில் கைது செய்யப்பட்ட இவரது கூட்டாளிகளின் வசிப்பிடங்களில் இருந்து 391 கிலோ மெத்த பெட்டமைன், 109-கிலோ கோக்கைகன் மற்றும் மற்றும் துப்பாக்கிகளை அந்நாட்டு காவல் துறையினர் கைப்பற்றி உள்ளனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

புதுச்சேரியில் வேலையில்லா திண்டாட்டத்தின் சதவிகிதம் குறைந்துள்ளது என்று துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.

13 ஆயிரத்து 600 கோடி ரூபாய்க்கான புதுச்சேரி பட்ஜெட்டை முதலமைச்சர் திரு ரங்கசாமி, வரும் 12-ஆம் தேதி தாக்கல் செய்ய உள்ளார்.

மத்திய அரசு யார் மீதும், எந்த மொழியையும் திணிக்க வில்லை என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்று மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, கோரி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------